00006

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

கல்விப்பீடம்

முன்பள்ளிக்கல்விச்சான்றிதழ் நிகழ்ச்சித்திட்டம் - 2019/2020

இறுதிப் பரீட்சை

**ESC1139/EPC1239–** முன்பள்ளி மற்றும் குழந்தை காப்பக நிலையத்தை ஒழுங்கமைத்தலும், நடாத்தலும்

காலம்: இரண்டு (02) மணித்தியாலங்கள்

திகதி:- 24.06.2023 நேரம்: மு.ப. 01.30 - பி.ப 03.30

- பகுதி **I** இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி **II** இல் ஏதேனும் மூன்று வினாக்களுக்கும் விடை தருக.

## பகுதி – I

1. "முன்பள்ளி முகாமைத்துவம்" எனும் பதத்தினை சுருக்கமாக விளக்குக.
2. முன்பள்ளியொன்றில் வாராந்த திட்டமிடல் என்பதால் கருதப்படுவது யாது?
3. முன்பள்ளிகளில் "சுற்றாடல் மூலையின்" முக்கியத்துவத்தினை சுருக்கமாக விபரிக்குக.
4. உங்களது முன்பள்ளி பிள்ளைகளை களப்பயணத்திற்காக எங்கு அழைத்து செல்வீர்கள்? **ஐந்து** (05) இடங்களை பெயரிடுக.
5. முன்பள்ளி செயற்பாடுகளை திட்டமிடும்போதுள்ள **ஐந்து** (05) நோக்கங்களை எழுதுக.
6. முன்பள்ளியில் குழுச்செயற்பாடுகளை வழங்கும் வழிகள் **ஐந்தினை** (05) பட்டியற்படுத்துக.
7. முன்பள்ளியில் வெளியக விளையாட்டு செயற்பாடுகளின் முக்கியத்துவத்தை சுருக்கமாக விபரிக்குக.
8. முன்பள்ளி பாடசாலையொன்றினை நிறுவுவதற்கு இடத்தினைத் தெரிவு செய்யும்போது கவனத்திற் கொள்ள வேண்டிய காரணிகள் **ஐந்தினை** (05) எழுதுக.

**(5 X 8= 40 புள்ளிகள்)**

## பகுதி - II

9.

i. முன்பள்ளி பாடசாலையொன்றினை விளைதிறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதில் சமூக வகிப்பங்கின் முக்கியத்துவத்தை பற்றி கலந்துரையாடுக.

(10 புள்ளிகள்)

ii. இலங்கையில் முன்பள்ளிக் கல்வியுடன் இணைந்த வகையில் அனைத்து அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் வகிப்பங்கினை மதிப்பிடுக.

(10 புள்ளிகள்)

10.

i. முன்பள்ளி வேலைகளை திட்டமிடல் என்பதால் கருதப்படுவது யாது என விளக்குக.

(10 புள்ளிகள்)

ii. முன்பள்ளி பாடசாலையொன்றில் நீர் செயற்படுத்தக் கூடிய ஓர் நாளாந்த திட்டமொன்றினை குறிப்படுக.

(10 புள்ளிகள்)

11.

i. "முன்பள்ளி பிள்ளைகளின் தேவைக்கேற்ப எவ்வாறு பாதுகாப்பான முன்பள்ளி கட்டிடத்திற்காக திட்டமிடுவீர் என்பதை விபரிக்குக.

(10 புள்ளிகள்)

ii. மேற்குறிப்பிட்ட வகையில் ஏன் கட்டிடத்தின் பிரதான அம்சங்களை திட்டமிட்டீர்கள் என்பதற்கான காரணங்களை தருக.

(10 புள்ளிகள்)

12.

i. முன்பள்ளிகளில் கணிப்பீட்டு செயன்முறை என்பதால் கருதப்படுவது யாது? சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

ii. முன்பள்ளிகளில் கணிப்பீட்டு செயன்முறையின் முக்கியத்துவத்தினை விபரிக்குக.

(12 புள்ளிகள்)

13. கீழ்வருவனவற்றுள் ஏதேனும் **இரண்டு (02)** பற்றி சிறுகுறிப்பு வரைக.

i. முன்பள்ளி பிள்ளைகளின் தளபாடங்கள்

ii. முன்பள்ளிகளில் வெளியக செயற்பாடுகளிற்கான உபகரணங்கள்

iii. முன்பள்ளி பிள்ளைகளிற்கான கணிப்பீட்டு செயன்முறை

iv. இலங்கையில் பகல் நேர பராமரிப்பு மையங்கள்

(20 புள்ளிகள்)

- *முழுப்பதிப்புரிமை பெற்றது* -